கவிதை

தமிழின் நிலை

தாயும் சேயும் பேசிடக் கேட்டேன்!
தமிழை விடுத்து வேறொரு பாசை!
ஏன் எனக் கேட்டேன்! எள்ளி நகையாடி
எக்காளமிட்டு ஏளனமாய் சொன்னாள்!

பரங்கியன் பாசை பணம் தரவல்லது!
பைந்தமிழ் படித்தால் பரதேசிதான் என்றாள்!!
பணம் தான் பாரில் எல்லாம் என்றால்
பத்தினியும் பரத்தையும் ஒன்றே என்றேன்!

பதறிப் போனாள்! பதில் வரவில்லை!
பாவம் அவள் என்ன செய்வாள்!
பாரில் பலரின் பரிதாப நிலையிது!
பதவியும் பணமும் படுத்தும் பாடு!!

சரித்திரத்தின் சதிகாரர்களால் சிதைக்கப் பட்ட
சிந்தனை!
சுதந்திரத்தின் சுவாசம் மறந்து சுகமாய் இருக்கிறது!!
சுயமாய் சிந்திக்கும் ஆற்றலிழந்தே!
சூழ நிற்கும் ஆபத்தை அறிய மறுக்கிறது!!

என்று மடியுமிந்த அடிமையின் மோகம் – என்றே
அன்று பாடிய பாரதியின் தாகம்!
இன்றும் இங்கே நீடிக்கின்றது – இது
நின்று நிலைத்திட நாம் விடலாமோ!

- ஆதவன்

சருகுகள்

சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப்
பூச்சிகளை
ரசிக்கும் தருணங்களைக் காட்டிலும்
என்றைக்கேனும்
இந்த வண்ணக்கலவை நிறமிழந்து
போகுமோ என்ற அச்சம் மிகுகிறது.
இரவுப் பனியில் குளித்தெழுந்து தலை
துவட்டாத ஈரத்தில்
இதழ் மலரக் காத்திருக்கும்
ரோஜாக்களைப் பார்த்து
புன்னகைக்கவும் மறந்து போய்
இன்று ஒரு நாள் மட்டும்தானே இந்த
அழகு என
கவலை தொற்றிக் கொள்கிறது
ஓயாத உன் பேச்சோடு கலந்து வரும்
புன்னகையில்
அதிக பங்களிப்பு இதழ்களுக்கா
விழிகளுக்கா என
ஆராயவும் மனமின்றி இது
எனக்கானதா என
ஏக்கமே நிலை தடுமாறச் செய்கிறது
எதன் மீதுமான நிச்சயமற்ற
நம்பிக்கைகள்
தொடக்கமறியத ஒரு தேடலில் முடிந்து
போகிறது
தேடுவது எதுவெனத் தெரியாமலே
தேடலின் வீச்சு தொடர்ந்து
கொண்டிருக்கிறது
இருப்பை மறந்த தேடலில்
கரைந்து ஓடும் கால வெளியில்
தொலைந்து போவது
என் சுயம் மட்டுமே

- கண்மணி

வங்கக் கடலில் தங்க மேனிகள்

வங்கக் கடலினில் வலம்வரு கையிலே
வாலிபன் கட்டிளம் காளையாம் கிட்டுசேர்
சிங்கக் குருளைகள், சீரிய பண்பினில்
செங்களம் கண்டோர்! செப்பிடும் வித்தைகள்
பங்கமின்றிப் புரிந்தோர்! பாரினில் யாரும்
பன்னுதற் கரிய ஈகைதனை ஈய்ந்தோர்!
தங்கமா மணிகள் சங்கமித்த நாளில்
தாள்கள் பணிந்து சாற்றினேன் மாலை!

வரலாறு போற்றும் வல்வெட்டித் துறைதனில்
வளமார்ந்த குடும்பத்தில் வண்ணமுறத் திகழ்ந்து
தரமிக்க வாழ்வுதனைத் தன்னகத்தே கொண்டு
தூயவளாம் இராசலக் சுமியுடன் இணைந்து
மரபுபேண் மார்க்கத்தில் மானுட தர்மத்தில்
மனமொன்றி வாழ்ந்த சதாசிவப் பெரியார்
வரமெனக் கிடைத்த வளர்பிறை மகனின்
வனப்பினில் மகிழ்ந்து களிப்புறும் வேளை.

கிருஸ்ண குமாரெனப் பெயர்தனைச் சூட்டிக்
கிடைத்தற் கரியநல் பேறென வளர்த்து
அருமருந் தெனவே அவனியில் நினைந்து
அளவிலா வசதிகள் பலவும் அளித்துப்
பருவமாம் பள்ளிசெல் பாலகன் அவனும்
பாடங்கள் அனைத்திலும் முதல்வன் ஆனான்!
இருப்பினும் அரசின் கொடுமைகள் அன்று
இணைந்திட வைத்தது அண்ணன் தன்னுடன்!

நம்பிக்கை மிகுந்து நலமுற பகிர்ந்த
நாயகன் கிட்டுவின் நடத்தைகள் கண்டு
தம்பியும் யாழ்தள பதியென நிறுத்தித்
தக்கவே பொறுப்புக்கள் தம்மையும் அளித்தான்!
எம்முன்னோர் ஆற்றிய இணையிலா அறத்தினால்
இத்தகைப் பேறென யாழ்மக்கள் மகிழ்ந்தனர்!
அம்மண் மடிதவழ் அழகு மழலைகளும்
ஆரத் தழுவுவர் கிட்டு மாமாவென!

அமைதிப் பேச்சினை அரசுடன் தொடுத்த
அருமை நிறைமதி தளபதி இவனே!
இமைக்கும் பொழுதினில் ஏந்தியே ஆயுதம்
எடுத்துச் சுழற்றும் வீரனும் அவனே!
தமையனின் சொல்லிற் தம்பியாய் நடந்து
தானை நடத்திய திறலோன் தீரனே!
சமயத்தில் அறிவுரை பகரும் பலமிகு
சான்றுடை அமைச்சனும் ஆனான் கிட்டுவே!

கைதிப் பரிமாற்றம் தம்மை எமக்குக்
காட்டிச் சென்ற கருணை யாளன்!
கைவண்ணம் தன்னில் கதைகள் படைத்த
காவிய நாயகன் காண்பதற் கெளியோன்!
வையக மெங்கும் தங்கியே நின்று
வானமாய் உயர்ந்த வல்லுரை யாளன்!
தைத்திரு நாளில் தங்கமேனி நீக்கித்
தாயக நினைவுடன் விண்ணகம் அடைந்தனன்!

ஊடகத் துறையை உலகினில் வாழும்
அனைத்துத் தமிழனும் இயக்கிட வைத்தவன்!
பாடலெழுதும் பாவலன், புகைப்படக் கலைஞன்
பன்மொழி பயின்ற பரப்புரை யாளன்!
கூடுகட்டி வாழ்ந்தனன்! கொஞ்சுதமிழன் நெஞ்சத்தில்!
கூடியே மறைந்தனன் குற்றமில் நண்பருடன்!
தேடுகிறோம் சந்தன மேனிகள் தம்மை!
திருப்பா தங்கள் பற்றிட விழைந்தோம்!

- பவித்திரா

ஈழம் உனக்கேயடா!

எப்படி மாறிவிட்டது உலகம்–
மனிதா
எப்படி மாறிவிட்டது.
உரிமை கேட்பவன்
ஒடுக்கப் படுகிறான்
உரிமை மறுப்பவன்
மதிக்கப் படுகிறான்.

தன் இனத்துக்காக
மொழிக்காக
நாட்டுக்காகப்
போராடுபவன் – தெரு
நாயைப் போல்
அடிக்கப்படுகிறான்!
தீவிரவாதி
சமூக விரோதி
அழிவுச் சக்தியென
நிந்திக்கப் படுகிறான்!

நிராயுதப் பாணியாய்
இருப்பவன் பக்கம்
நியாயமும் நிற்பதில்லை!
நீதிகேட்கும் போராளிப்பக்கம்
நித்தம் நித்தம் தொல்லை!
ஆயுதம் தாங்கி
அக்கிரமம் செய்பவரை
எவரும் கேட்பதில்லை!
அவன் ஊரையழித்தாலும்
உயிர்களழித்தாலும் – உலகம்
கண்டு கொள்வதில்லை.
ஈழம் ஆனாலும்
ஈராக் ஆனாலும்
குற்றவாளியாய்க்
கருதப்படுபவன்
மண்ணின் மைந்தனே!
கல்லை எறிந்து
எதிர்ப்பைக் காட்டுபவன்
தீவிர வாதியாம்!
ஆயுதம் ஏந்தி
உயிரை அழிப்பவன்
பாதுகாவலனாம்!

இருளில் மூழ்கி
உறங்கிக் கிடக்குது
உலகம் இப்போதடா!
விழித்துக் கிடந்து
போர் செய்துக் கிடப்பது
வீரர் நீங்களடா!
விடியும் நிச்சயம்
மடியும் பகைமை
வெற்றி உன்னதடா!
விடுதலை கிடைக்கும்
உலகே போற்றும்
தமிழீழம் உனக்கேயடா!!

- இமாம். கவுஸ்.மொய்தீன்

சரணம் கச்சாமி!

வன்னியைப் பிடித்திடுவோம்
வாற எட்டு மாதமதில்
என்னை நம்பி எல்லோரும்
எனக்குதவி செய்திடென்று
பொன்னை நம்பிப் பொன்சேகா
பொதுச்சபைக்கு அறிக்கை விட
தன்னை நம்பி வாழுகின்ற
தமிழ் மகனோ சிரித்திட்டான்

எத்தனைபேர் சொல்லியிந்த
எதிர் மறையாம் வாசகத்தை
சொத்ததுதான் எம்மதென்று
சொப்பனத்தில் அரசியலார்
பித்தர் எண்ணி சிங்களத்தை
பிசகாமல் நாட்கடத்த
சத்தியத்தின் வழிவந்தோர்
சந்தியிலே சிரிக்கின்றார்.

மண்ணெண்ணை விற்றவனும்
மந்திரியின் செயலாளன்
பெண்ணை விட்டு வந்தவனும்
பெரும் சபையில் வீற்றிருக்க – நல்
எண்ணை தடவுதற்காய்
எம் தமிழன் காத்திருக்கான்
எண்ணை ஏது எள்ளு விலை
எடுத்தவற்றால் தடவிடுவார்

த.சு மணியம்.

ஸ்ரீ துர்க்காதேவி ஜோதிடம்
தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள்

Mob: **07947 781 197**
07857 414 342

Mobile inn
320,London Road, West Croydon
Surrey CR0 2TJ
(opposite Best Food super Market)
(Near Mithus Gold House)

திருமணப் பொருத்தம் சாதகம் குறித்துக் கொடுக்கப்படும்.

23 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள் துர்க்கா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள், கணவன் மனைவி ஒற்றுமை,கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம்,கண் திருஷ்டி,கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

Devendran Sastry

23 Years expert pandit at service, past, presents and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, job, Love, Marriage, Family problem, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad, Money, Removal all type of black magic and evil things by performing prayers, Devi Upasana, Luxmi pooja also protecting from enemies and jealousy Protection for self, House Business, Spoken Languages: Tamil, Hindi & English.

Call: **07947 781 197** or **07857 414 342**

Opening Hours: 9.30am to 8.30pm 7 Days a week